# கலைஞர் கருணாநிதி சபலம் என்னும் சிறுகதையில் சமூகச் சிந்தனைகள்
# Social Thoughts in the short story: Sabalam of Karunanithi

முனைவர் உமா அழகிரி
Dr Uma Allaghery

"TAM 2001 Y (3) 6.3 Social ideals in the short story: Sabalam of Karunanithi(PPT) " by Dr Uma Allaghery(2024), Mahatma Gandhi Institute is licensed under CC BY 4.0

# கலைஞர் கருணாநிதி

- படைப்பாளர்
- சிந்தனையாளர்
- மொழிப் பற்றாளர்
- அரசியல்வாதி
- சமூகச் சீர்திருத்தாளர்
- மனிதாபிமானத் தன்மை உடையவர்
- திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்
- முத்தமிழறிஞர்

# கலைஞர் கருணாநிதி

- சிறந்த பேச்சாளர்
- சட்ட மன்ற உறுப்பினர்
- விருதுகளும் சிறப்புகளும் பெற்றவர்
- நகைச்சுவைத் தன்மை கொண்டவர்
- சமூக உணர்வு கொண்டவர்
- தனி மொழிநடையை உருவாக்கியவர்
- தனிப்பட்ட சிந்தனைப் போக்கு உடையவர்
- தனிப்பட்ட படைப்பாற்றல் திறனுடையவர்
- தனிப்பட்ட இலக்கிய ஆளுமை உடையவர்

# கலைஞரின் படைப்பாக்கம்

- சிறுகதைத் தொகுதிகள் (14)
- நாவல்கள் (10)
- நாடகங்கள்
- தன் வரலாறு
- வரலாற்றுப் புனைவுகள் (4)
- கவிதைத் தொகுதிகள் (9)
- உரைநூல்கள் (3)

# கலைஞரின் படைப்பாக்கம்

- இலக்கிய மறுப்படைப்புகள் (4)
- சொற்பொழிவுகள் (4)
- கட்டுரைகள் (29)
- சிறுகுறிப்புகள் (16)
- கதை, வசனம் (4)
- பயணக் கட்டுரைகள் (1)
- கடிதங்கள் (12)

# கலைஞர் சிறுகதைகளில் சமூகச் சிந்தனைகள்

- மூடநம்பிக்கை ஒழித்தல்
- தமிழ்ப் பற்றை வளர்த்தல்
- இந்தி எதிர்ப்பு காட்டுதல்
- ஆண் மற்றும் பெண் சரிநிகரானவர்கள் எனப் புலப்படுத்துதல்
- பெண் உயர்வினைக் காட்டுதல்
- கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் பரஸ்பர உணர்வு இருத்தல் ……

# கலைஞர் சிறுகதைகளில் சமூகச் சிந்தனைகள்

- பகுத்தறிவு வாதத்தைப் பின்பற்றுதல் (Rationalist)
- சாதியை மறுத்தல்
- ஏற்றத்தாழ்வுள்ள நிலையை ஒழித்தல்
- கைம்பெண் மறுமணத்தை ஆதரித்தல்
- சாதி மறுப்புத் திருமணத்தை வரவேற்றல்
- புரோகித மறுப்பை வலியுறுத்தல்

# கலைஞர் சிறுகதைகளில் சமூகச் சிந்தனைகள்

- தமிழுணர்வை வளர்த்தல்
- பழந்தமிழ் இலக்கியத்தை முன்னுக்குக் கொண்டு வருதல் (குறளோவியம், சங்கத்தமிழ், தொல்காப்பியப் பூங்கா முதலியவற்றில் உள்ள செய்திகளைப் பகிர்ந்து கொள்ளுதல்)
- தமிழ்ப் பண்பாட்டைத் தக்கவைத்தல்
- ஆரியப் பண்பாட்டைப் புறக்கணித்தல்
- கடவுள் மறுப்பு காட்டுதல்
- வரலாற்று உண்மையை எடுத்துரைத்தல்

# சபலம் என்னும் சிறுகதை

- சாதாரண ரயில் பயணத்து நிகழ்ச்சி.
- சபலம் கொண்ட ஒரு வாலிபனின் செயலால் கணவனுக்குக் கோபம் ஏற்பட்டது. அவன் தன் மனைவிமீது சந்தேகம் கொண்டான்.
- அதனால் ஆத்திரம் கொண்ட கணவன் தங்கள் குழந்தையை ரயில் சன்னல் வழியாகத் தூக்கி எறிந்தான்.
- மனைவி சந்திரா வாலிபனின் தொல்லையைத் தாங்காமல் அவனை அறைத்தாள். இதைக் கண்ட கணவன் குமரேஸ் திடுக்கிட்டான்.

# சபலம் என்னும் சிறுகதை

- “என் சிறு வயதில் இறந்துபோன அண்ணன் மாதிரியே இருந்தது…………. பார்த்தேன்… அந்தப் பாவி..” என்று விம்மி விம்மியழுதாள் சந்திரா.” (சபலம் ப. 25)
- கணவன் மனைவியை நம்ப வேண்டும்; சந்தேகப்படக் கூடாது. இதனால் ஏற்பட்டுள்ள விபரீதம் இக்கதையில் காண முடிகிறது.
- ஆத்திரத்தால் கணவன் செய்துள்ள கொலையைச் சிந்திக்கத்தக்கது.
- ஒன்றும் தெரியாத அந்தக் குழந்தை பலியாகிவிட்டது.

# சபலம் என்னும் சிறுகதையில் சமூகச் சிந்தனைகள்

- கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் கருத்துப் பரிமாற்றம் இருக்க வேண்டும்.
- கணவன், மனைவி மற்றும் பிள்ளையைக் காப்பாற்றும் பொறுப்பு உடையவனாக இருக்க வேண்டும்.
- சபலம் கொண்ட வாலிபனைத் தண்டித்திருக்க வேண்டும். ஆனால், அவனை விட்டுவிட்டார்கள்.
- கணவன் தன் மனைவி அழகாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கிறான். ஆனால், அவன் மனைவியை நம்ப வேண்டும்.
- “அழகுக்காகத்தான் சந்திராவை அவன் மணம் புரிந்தான். அவள் வீட்டுக்கு வந்த பிறகு அறிவும் நிரம்பியவள் என்பதைக் கண்டு மகிழ்ச்சி கொண்டான். குதூகலமாக ஓடிக்கொண்டிருந்த அவர்களின் குடும்ப வாழ்க்கைக்கு அந்த ரயில் பிரயாணம் முட்டுக்கட்டையாகத்தான் வாய்த்தது.” (சபலம் ப. 22)

# சபலம் என்னும் சிறுகதையில் சமூகச் சிந்தனைகள்

- பெண்ணை ஒரு பொருளாகக் கருதுவது தவறு.
- கணவன் மனப்போராட்டத்தினால் செய்துள்ளதைக் கண்டிக்கத்தக்கது.
- உளவியல் அடிப்படையில் அமைந்துள்ள இச்சிறுகதை மனிதனுடைய சிந்தனைப் போக்கு, மனப்போராட்டம், மனக்குழப்பம், மன அமைதியின்மை ஆகியவற்றைச் சுட்டிக்காட்டுகிறார் கலைஞர் கருணாநிதி.
- நிதானமாகவும் மன ஒன்றுபடுத்திச் செயல்பட வேண்டும் என்றும் வழிகாட்டுகிறார் கலைஞர் அவர்கள்.